இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 26 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 19 – சனிக்கிழமை 05 செப்டம்பர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 26 : Thiruvalluvar Year - 2057 - Aavani 19 - Saturday 05 September 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் நாள்தோறும் கொலைகள், கொள்ளைகள்! முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள

# உளவுத்துறையும் உள்துறையும் முற்றிலும் செயலிழந்து விட்டது!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆதாரத்துடன் அடுக்கடுக்கான குற்றச்சாட்டு!

சென்னை, செப்.5-

**சட்டப்பேரவையில் நேற்று, காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள உள்துறையும் உளவுத்துறையும் முற்றிலுமாக செயலிழந்து, தமிழ்நாட்டில் நாள்தோறும் கொலைகள், கொள்ளைகள், என சட்டம் - ஒழுங்கு மிகவும் மோசமான நிலையில் சீர்குலைந்துள்ளது" என்று அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் எழுப்பி உரையாற்றினார்.**



சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், காவல்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, ஆற்றிய உரை வருமாறு:-

பெருமைக்குரிய இந்த சட்டமன்றத்தில் காவல்துறை மானியத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு எனது மகிழ்ச்சியை, நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை முதலில் நான் வணங்குகின்றேன். இந்த வாய்ப்பை எனக்குக் கொடுத்த எங்களுடைய கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 'திராவிட மாடல்' ஆட்சியில் நன்றாக இருந்த சட்டம் – ஒழுங்கு!

இன்று சட்டம் ஒழுங்கைப் பற்றி பேச எனக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். மக்கள் பிரச்சினைகள் சார்ந்து நான் எழுப்புகின்ற கேள்விகளுக்குக் கவனத் திருப்பலோ (Diversion), பழி போடுகின்ற தந்திரங்களோ (Tactics) இல்லாமல் முதலமைச்சர் அவர்கள் உரிய பதிலைக் கொடுப்பார் என்கின்ற நம்பிக்கையில் என்னுடைய பேச்சை தொடங்குகிறேன்.

ஏனென்றால் ஆக்கபூர்வமான விமர்சனங்களை எழுப்புவதற்காகவே சட்டமன்றத்திற்கு எதிர்க்கட்சியாக எங்களை மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.

முதலில் இந்த அரசு கொடுத்திருக்கக் கூடிய 'கொள்கை விளக்கக் குறிப்பு' நேற்று இரவு 12 மணியளவில் என் கைக்கு வந்து சேர்ந்தது. நான் படித்துப் பார்த்தேன்.

திராவிட மாடல் ஆட்சியில் குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்று அந்த கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், பக்கம் 293, 295, 296ஆம் பக்கங்களில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

குறிப்பாக வழிப்பறி, திருட்டு ஆகிய குற்றங்கள் 2024ஆம் ஆண்டைக் காட்டிலும் 2025ஆம் ஆண்டில் பெருமளவு குறைந்திருக்கிறது என்று தரவுகளுடன் (Data), புள்ளி விவரங்களுடன் (Statistics) அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

கொலை, கொலை முயற்சி, கலவரங்கள், பாலியல் குற்றங்கள் அனைத்தும் குறைந்திருக்கின்றன என்று அந்தப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், சாதிய பாகுபாட்டுக் கொலைகள் பெருமளவில் குறைந்திருக்கின்றன என்று உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். எனவே, எங்களுடைய திராவிட மாடல் ஆட்சியில் சட்டம்ஒழுங்கு நன்றாக இருந்தது என்று காவல்துறை, கொள்கை விளக்கக் குறிப்பில் நேர்மையாக ஒப்புக் கொண்டதற்கு முதலில் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பெயர் மாற்ற அறிவிப்பு! திட்டங்கள் ரத்து!

இந்த அரசு அமைந்து சரியாக, 116 நாட்கள் ஆகின்றன. இந்த 116 நாட்களில் இந்த அரசு புதிதாகத் திட்டங்களைக் கொண்டு வந்ததை விட, ஏற்கனவே இருந்த எங்களுடைய அரசு கொண்டு வந்த பல திட்டங்களை ரத்து செய்திருக்கிறார்கள். இந்த அரசிடமிருந்து, ஒன்று பெயர் மாற்ற அறிவிப்பு வருகிறது. அப்படி இல்லை என்றால் திட்டமே ரத்து என்கின்ற அறிவிப்பு வருகிறது.

உதாரணத்திற்கு 'பரந்தூர் விமான நிலையம்', 'காஞ்சிபுரம் புதுநகர் திட்டம்', 'குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி திட்டம்', 'நாமக்கல் சிப்காட்', 'பரந்தூர் மெட்ரோ', 'ஈ.சி.ஆர் மேம்பாலம், `ஓசூர் டைடல் பார்க்', 'ஓசூர் நாலேட்ஜ் பார்க்', இப்போது சமீபத்தில் 'மாமல்லன் நீர்தேக்கம் திட்டமும்' ரத்து என்று இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே இருக்கிறது.

### த.வெ.க. ஆட்சியில் ரிவர்ஸ் கியரில் தமிழ்நாடு!

எங்களுடைய கழக அரசு நடந்தபோது, தமிழ்நாடு டாப் கியரில் சென்று கொண்டிருந்தது. ஆனால், இந்த 116 நாட்களில் இன்றைக்கு தமிழ்நாடு ரிவர்ஸ் கியரில் சென்று கொண்டிருக்கிறது. நான் முதலமைச்சரிடம் கேட்க விரும்புவது, எங்களுடைய கழக அரசு, தமிழ்நாட்டினுடைய நலனுக்காகக் கொண்டு வந்த திட்டங்களை எதற்காக ரத்து செய்திருக்கிறீர்கள்?

தேர்தல் வாக்குறுதியில் ஏராளமான திட்டங்களைச் சொல்லியிருந்தீர்கள். 'ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடமே நிறைவேற்றுவோம்' என்று சொல்லியிருந்தீர்கள். 'விவசாயக் கடன் முழுவதும் தள்ளுபடி' என்று சொன்னீர்கள். 'வருடத்திற்கு 6 சிலிண்டர்', 'எல்லா பேருந்துகளிலும் பெண்களுக்குக் கட்டணமில்லாப் பயணம்' என்று வாக்குறுதி கொடுத்திருந்தீர்கள். ஆனால், இவர்களுடைய அறிவிப்பெல்லாம் எப்படி இருக்கிறது என்று பார்த்தீர்கள் என்றால், விவசாயக் கடன் தள்ளுபடிக்குப் பல்வேறு அடுக்குமுறைகளை (Slabs) வைத்திருக்கிறீர்கள்.

இப்போது, '3 சிலிண்டர் மட்டும்தான் தருவோம், அதையும் அடுத்த வருடம்தான் தருவோம்' என்று சொல்லிவிட்டீர்கள். கொடுத்த வாக்குறுதியை முழுமையாகச் செயல்படுத்தாமல், இப்படி பாதி பாதியாக நிறைவேற்றப் போவதாக அறிவிப்பு மட்டுமே வெளியிட்டு இருக்கிறீர்கள்.

### 'தாய்மாமன் காது குத்தும் திட்டம்!'

**'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்' என்று சொன்னீர்கள். ஆனால், இந்த அரசின் அறிவிப்புகள் எல்லாம் பார்த்தீர்கள் என்றால், எல்லா திட்டத்திற்கும் மொத்தமாகச் சேர்த்து 'தாய்மாமன் காதுகுத்தும் திட்டம்' என்று நீங்கள் பெயர் வைத்துவிடலாம். இந்த அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை விட, இவர்கள் போடுகின்ற ரீல்ஸ் எல்லாம் மக்களை அதிகமாகச் சென்றடைந்தால் போதும் என்றுதான், இந்த அரசின் செயல்பாடுகள் இருக்கின்றன.**

'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்' என்று சொன்னீர்கள். ஆனால், இந்த அரசின் அறிவிப்புகள் எல்லாம் பார்த்தீர்கள் என்றால், எல்லா திட்டத்திற்கும் மொத்தமாகச் சேர்த்து 'தாய்மாமன் காதுகுத்தும் திட்டம்' என்று நீங்கள் பெயர் வைத்துவிடலாம்.

இந்த அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை விட, இவர்கள் போடுகின்ற ரீல்ஸ் எல்லாம் மக்களை அதிகமாகச் சென்றடைந்தால் போதும் என்றுதான், இந்த அரசின் செயல்பாடுகள் இருக்கின்றன. எனவே இந்த நிலை எப்போது மாறும் என்று முதலமைச்சர் அவர்கள் அவருடைய பதிலுரையில் சொல்ல வேண்டும்.

காவல்துறையைப் பொறுத்தவரை, அந்தத் துறையின் மேம்பாட்டிற்காக எங்களுடைய கழக ஆட்சிக் காலத்தில்தான் எங்களுடைய தலைவர் முதலமைச்சராக இருந்த போதுதான் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டில் காவல்துறை சீர்திருத்தத்திற்காக இதுவரை அமைக்கப்பட்ட 5 காவல் ஆணையங்களில் 4 காவல் ஆணையங்கள் கழக ஆட்சியில், எங்களுடைய ஆட்சிக் காலங்களில் அமைக்கப்பட்டன.

கடைசியாக, 2023ஆம் ஆண்டு எங்கள் தலைவர் தலைமையிலான ஆட்சியில் ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சி.டி.செல்வம் அவர்கள் தலைமையில் ஐந்தாவது காவல் ஆணையம் (Police Commission) அமைக்கப்பட்டது.

அந்த ஆணையத்தில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அலாவுதீன் அவர்கள், ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி கே.ராதா கிருஷ்ணன், இன்னும் பிற காவல்துறை அதிகாரிகள், மனநல மருத்துவர்கள் (Psychiatrists), கல்வியாளர்கள் (Academicians) இவர்கள் எல்லோரும் அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

2023இல் அந்த ஆணையம் அவர்கள் கொடுத்த இடைக்கால அறிக்கையில் இன்னொன்று சொல்லியிருந்தார்கள். அதற்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற வகையில், அன்றைய முதலமைச்சரான எங்களுடைய தலைவர் அதற்கான அறிவிப்புகள் எல்லாம் வெளியிட்டுச் செய்து காட்டினார்.

### படிப்படியாக பரிந்துரைகள் நிறைவேற்றம்!

ஐந்தாவது காவல் ஆணையம் (Fifth Police Commission) அதனுடைய முழுப் பரிந்துரைகளில் கிட்டத்தட்ட 800 பரிந்துரைகளைக் கொடுத்திருந்தார்கள். அதில் 86 பரிந்துரைகளை, எங்களுடைய ஆட்சியில் படிப்படியாக நாங்கள் நிறைவேற்றிக் காட்டினோம்.

இந்த அரசை நான் கேட்டுக் கொள்வது, மீதமிருக்கக்கூடிய நீண்டகாலப் பரிந்துரைகளை இந்த அரசு படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்று என்னுடைய கோரிக்கையை நான் வைக்கிறேன்.

முக்கியமாக, இஸ்லாமிய சமுதாயத் தலைவர்களுடைய கோரிக்கையை ஏற்று, பல ஆண்டுகளாகச் சிறையில் வாடிய இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு எங்கள் ஆட்சியில் பரோலும், நீண்டகால விடுப்பும் கொடுத்திருந்தோம்.

எங்களுடைய அரசு செய்தது போல இந்த அரசும் நீண்ட நாட்களாகச் சிறையில் உள்ள இஸ்லாமிய கைதிகளுக்கு நீண்ட கால விடுப்பு கொடுக்க வேண்டும் என்று அவர்களுடைய குடும்பத்தினர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த கோரிக்கையை இந்த அரசு ஏற்று உடனே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று உங்களுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

கடந்த 5 ஆண்டுகளில் சட்டம்ஒழுங்கை நிலைநாட்டுவதில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு நிச்சயம் சிறப்பாகச் செயல்பட்டது. இதுவரை இல்லாத வகையில், அதிக அளவிலான போதைப்பொருட்களை எங்களுடைய ஆட்சியில் நாங்கள் பறிமுதல் செய்திருக்கிறோம்.

### சட்டம் இருக்கிறது, ஒழுங்கு இல்லை!

முதன்முறையாகக் குற்றவாளிகளுடைய வங்கிக் கணக்குகள், சொத்துகள் முடக்கப்பட்டன. அதிகப்படியான தண்டனைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டன. குறிப்பாக, பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் உடனுக்குடன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனையை எங்களுடைய அரசு பெற்றுத் தந்தது.

உதாரணத்திற்கு, வேலூரில் நடந்த ஒரு பாலியல் வன்கொடுமை வழக்கில், 32 நாட்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தோம். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை? சட்டம் இருக்கிறது, ஆனால், ஒழுங்கு இல்லை.

இது வெறும் குற்றச்சாட்டு மட்டும் இல்லை, ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் நிலைமைதான் இது.

இவர்களுடைய 116 நாள் ஆட்சியில் மக்களுக்கு, குறிப்பாக, பெண்களுக்கு இது ஒரு மிகப்பெரிய துயரமாக மாறிவிட்டது. தினமும் செய்தித்தாள்களைத் திறந்து பார்த்தால், எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள் என்று தினமும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. கறிக் கடையில்கூட இந்த அளவுக்கு வெட்ட மாட்டார்கள். அந்த அளவுக்குத் தமிழ்நாட்டில் தினசரி வெட்டுக்குத்துகள் நடந்துகொண்டிருக்கின்றன.

### 116 நாட்களில் 10 ஆணவக் கொலைகள்!

நகைக்காகக் கொலை, போதைப் பொருள் விற்பனையை அம்பலப்படுத்தினால் கொலை, மது போதையில் கொலை என்று கொலை நடக்காத நாளே இன்றைக்குத் தமிழ்நாட்டில் இல்லை.

சென்ற ஆகஸ்ட் மாதத்தில் மட்டும், கோவை மாவட்டத்தில் மட்டும் 9 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி அமைந்த 116 நாட்களில், 10 ஆணவக் கொலைகள் நடந்திருக்கின்றன. அதில் ஒன்றிற்குக்கூட முதலமைச்சர் அவர்கள் வாய் திறக்கவில்லை. முன்பெல்லாம் 'ஆணவக் கொலைகள்' என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள், இந்த ஆட்சி அமைந்த உடனே

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## கவனத் திருப்பலோ - பழிபோடுகின்ற தந்திரங்களோ இல்லாமல் முதல்வர் பதில் அளிக்க வேண்டும்!